**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 49/2021**
**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | **சின்னன்னன்** (PW5) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of March 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(A2 present. A1 died.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது நடுப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு பாத்திர வியாபாரம் செய்து வருகிறேன். வெள்ளோட்டம்பரப்பு, மெயின் வீதியை சேர்ந்த ஹரிதாசன் சாமி என்பவரை தெரியும். சுமார் 4,5 வருடங்களுக்கு முன்பு மாதம், தேதி ஞாபகம் இல்லை, மதியம் 02.00 மணி சுமாருக்கு நான் நடுப்பாளையத்தில் உள்ள சுந்தரவடிவேலின் உரக்கடைக்கு அருகில் உள்ள பைனான்சிற்கு வந்தபோது பக்கத்தில் கூட்டமாக இருந்தது. ஏதோ திருடு போய்விட்டது என்று சொன்னார்கள், நான் சென்று பார்த்தேன். திருடிய நபர்கள் இரண்டுபேர் இருந்தார்கள், அவர்களில் ஒருவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி. அவர்களிடம் இருந்து பணம் ரூ.8,800/– வாங்கிவிட்டோம், அதற்கு சாட்சி கையொப்பம் போடும்படி சொன்னார்கள், நான் சாட்சி கையொப்பம் செய்தேன். திருடிய நபர்களை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டார்கள். அந்த நபர்கள் நாங்கள் தான் திருடினோம் என்று ஒப்புக்கொண்டார்கள். என்னிடம் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் போலீசார் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் படிவம் 91ல் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.11 ஆக குறியீடு**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.16 11:14:45 +0530

**செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரித்தபோது நான் கணபதிபாளையம், திருவள்ளுவர் காலனியில் குடும்பத்துடன் வசித்து விவசாயம் செய்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரர் சுந்தரவடிவேல் எனக்கு உறவினரா என்றால் எனக்கு தெரிந்தவர். தர்மராஜ், ராமலிங்கம், ஆனந்தன், கணபதி, ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்தபோது நான் எங்கு இருந்தேன் என்றால் உரக்கடைக்கு அருகில் உள்ள கடையில் தான் இருந்தேன். உரக்கடை நடுப்பாளையம்பேருந்து நிறுத்தத்தில் இருந்து சுமார் 100 அடி தூரத்தில் இருக்கும். அது கடையை ஒட்டிய மெயின் ரோடு என்றால் சரிதான்.

2. பைனான்ஸ் கடையில் இருந்து பார்த்தாலே உரக்கடை தெரியும் என்றால் சரிதான். திருட்டு நடந்த சத்தம் கேட்டு தான் நான் வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் வெளியே வந்து பார்க்கும்போது எதிரிகளை பிடித்துவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி எதிரிகளை பிடித்த உடனே காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து தான் எதிரிகள் திருடிய பணத்தையும், வண்டியையும் கைப்பற்றினார்களா என்றால் சம்பவ இடத்தில் வைத்தே போலீசார் கைப்பற்றினார்கள். எதிரிகளை காவல்நிலையத்திற்கு அழைத்து செல்வதற்கு முன்பே போலீசார் அங்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான். போலீசாருக்கு யார் சம்பவம் குறித்து கூறினார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் இருவரிடம் இருந்து பணம்ரூ.8,800/– ஐ கைப்பற்றினார்கள் என்றால் ஒருவரிடம் இருந்து மட்டும் தான் ரூ.8,800/–ஐ கைப்பற்றினார்கள். மொத்தமாக எதிரியிடம் கைப்பற்றியது ரூ.8,800/–என்றால் சரிதான்.

3. ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கு வைத்து வாங்கினார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து தான் வாங்கினார்கள். சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.16 11:14:52 +0530

சம்வத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், என் முன்னிலையில் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும், அ.சா.1 எனக்கு பழக்கமானவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.16 11:14:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 49/2021**
**Prosecution Witness**:6

| Name | கணபதி (PW6) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of March 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(A2 present. A1 died.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது நடுப்பாளையம், வடுகனூரில் குடியிருந்து கொண்டு நடுப்பாளையத்தில் சரவண ஏஜென்ஸிஸ் என்ற பெயரில் உரக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 சுந்தரவடிவேலை தெரியும், அவர் நடுப்பாளையத்தில் உரக்கடை வைத்துள்ளார். கடந்த 30.06.2021ம் தேதி காலை 08.30 மணி சுமாருக்கு நடுப்பாளையத்தில் உள்ள சுந்தரவடிவேலின் உரக்கடையில் முந்தைய நாள் திருட்டு போய்விட்டதாக கேள்விப்பட்டு நான் சுந்தரவடிவேலின் உரக்கடைக்கு விசாரிக்க சென்றபோது மலையம்பாளையம் போலீசார் திருட்டு போன சுந்தரவடிவேலின் கடை அருகில் உள்ள கடைகளை வரைபடம் வரைந்து என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னுடன் தர்மராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விாசரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எனக்கு சம்பவம் பற்றி மறுநாள் காலை 08.30 மணிக்கு நான் அங்கு சென்று கேட்ட பிறகு தான் தெரியும் என்றால் சரிதான். யாரை கேட்டு சம்பவம் குறித்து தெரிந்துகொண்டேன் என்றால் அருகில் இருந்தவர்கள் பேசி கொண்டிருந்தார்கள்,

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.16 11:15:02 +0530

அதை வைத்து தெரிந்துகொண்டேன். நான் சொந்தமாக உரக்கடை நடத்தி நானே நிர்வகித்து வருகிறேன் என்றால் சரிதான். காலை 08.00 மணிக்கு கடை திறப்பேன், மாலை 07.00 மணிக்கு கடையை பூட்டுவேன். சுந்தரவடிவேல் உரக்கடையானது ஈரோடு– கரூர் மெயின்ரோட்டில் இருந்து எத்தனை அடி தள்ளி உள்ளது என்றால் 10 அடி தள்ளி உள்ளது. அப்போது கொரோனா காலம் சுந்தரவடிவேல் உரக்கடையில் எத்தனை அடி தள்ளி கயிறு கட்டப்பட்டிருந்தது என்றால் ஞாபகம் இல்லை. சுந்தரவடிவேல் உரக்கடையை ஒட்டி தான் பைனான்ஸ் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பைனானஸ் ஆனது உரக்கடைக்கு இடதுபக்கமாக அமைந்துள்ளது.

2. சம்பவ இடமானது பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் சம்பவம் நடந்த அன்று நான், தர்மராஜ், ராமலிங்கம், ஆகியோர்கள் சேர்ந்து தான் திருடனை பிடித்தோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. உரக்கடை வைத்துள்ள சுந்தரவடிவேல் எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான், உறவினர் அல்ல. நான் சுந்தரவடிவேல் எனக்கு தெரிந்தவர் என்பதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.16 11:15:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.